

# இரண்டு வார்த்தை

துன்பத்தை விரட்டுவதற்கே எல்லோரும் விரும்புகிறார்கள். துன்பம் என்று அவர்கள் கருதுவது வறுமை, பிணி, பகை, இயற்கையின் சீற்றங்கள் இவைகளைத்தான். இந்த துன்பங்களெல்லாம் மரத்தின் கிளைகள், இலைகள் போல. இவைகளை வெட்டினால் மீண்டும் துளிர்க்கும். நீங்கள் குறி வைக்க வேண்டியது கிளைகளையோ... இலைகளையோ அல்ல. வேருக்கு குறிவையுங்கள். துன்பம் வேரோடு சாய்ந்து போகும். நமக்கு தொடர்ந்து துன்பங்கள் விளைத்து வரும் பகைவர் இருவர்தான். ஒருவன் காலன், மற்றொருவன் காமன். இந்த காலனையும், காமனையும் அழித்தவன் சர்வேஸ்வரன். அவனைப் பற்றிக் கொண்டு காரியத்தில் இறங்கினால் துன்பம் தலை தெறிக்க ஓடுவதைக் கண்கூடாக காண்பீர்கள். இந்த லட்சியத்தை அடிப் படையாகக் கொண்டு ''துன்பமே தூரப்போ'' என்ற தலைப்பில் இந்நூல் உதயமாகியுள்ளது. துன்பங்களை மிக எளிதாக விரட்டுவதற்கான வழிகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. துன்பத்தை விரட்டும் இந்த போர்க்களத்தில் நால்வகை சேனைகள் உங்களுக்குத் தேவையில்லை. படைத் தலைவர்களும் அவசியமில்லை.

வெளியே இருந்து எந்த உதவியும் உங்களுக்கு வேண்டியதில்லை. உங்களுக்குள்ளே இருக்கும் சக்தியே இந்த துன்பத்தை தூரப்போ என்று விரட்டிவிடும். இந்நூலை அன்பர்கள் பலமுறை

படித்து துன்பத்தின் ஆணிவேரை சாய்க்க வேண்டும். வெற்றி வீரர்களாக இந்த வையகத்தில் திகழ வேண்டும். என்னுடைய தந்தையும், வழிகாட்டியும் குருவுமாகிய பரமஹம்ச ஸ்ரீபுவனேஸ்வரி ஸ்வாமிகள் எனக்கு ஆணைகள் பல தந்துள்ளார். அவைகளை நிறைவேற்ற நான் உறுதி பூண்டிருக்கிறேன். நீங்கள் நீங்காத செல்வம் பெற்று நிறைவான வாழ்க்கை வாழ எம்பெருமானார் திருவடிகளை சிந்திக்கின்றேன்.

அன்புடன்
பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்